# April 13, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. அருணாசல பிரதேச மாநிலத்தில் உள்ள சில இடங்களுக்கு சீனா புதிய பெயர்கள் சூட்டியதை இந்தியா நிராகரித்துள்ளது.

(i) இந்தியாவின் அருணாசலப் பிரதேச மாநிலத்தை தங்களுக்கு சொந்தமானமான திபெத்துக்கு உட்பட்ட பகுதி என்று சீனா பல ஆண்டுகளாக உரிமை கொண்டாடி வருகிறது. அவ்வப்போது அருணாசல பிரதேச மாநிலத்தில் உள்ள மலைகள், குன்றுகள் உள்ளிட்ட இடங்களுக்கு புதிய பெயரிடுவதையும் சீனா வழக்கமாக வைத்துள்ளது. இதற்கு இந்தியா தொடர்ந்து கண்டனம் தெரிவித்து வருகிறது.

(ii) இந்நிலையில், அருணாசல பிரதேச மாநிலத்தில் உள்ள மேலும் சில இடங்களுக்கு சீனா புதிய பெயரிட்டுள்ளது. இதுகுறித்து தில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரண்தீர் ஜெய்ஸ்வாலிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர் அளித்த பதில் வருமாறு:

- அந்த இடங்கள் அனைத்தும் இந்தியாவுக்கு சொந்தமான இடங்களாகும். அவை எப்போதும் இந்திய பகுதிகளாகவே இருக்கும். அதை ஒருபோதும் இந்தியாவில் இருந்து பிரிக்க முடியாது. ஆதலால் அந்த இடங்களுக்கு சீனாவால் சூட்டப்பட்ட புதிய பெயர்களை இந்தியா திட்டவட்டமாக நிராகரிக்கிறது.
- அந்த இடங்களுக்குப் புதிய பெயர் வைப்பதாலோ, சொந்தம் கொண்டாடுவதாலோ, உண்மை நிலையில் எந்த மாற்றமும் ஏற்படாது. இந்தியா- சீனா இடையேயான இருதரப்பு உறவுகளில் எதிர்மறையை ஏற்படுத்தும் செயல்களில் ஈடுபடுவதையும், சிறப்பான புரிதல் ஏற்பட மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளுக்குப் பின்னடைவை ஏற்படுத்தும் செயல்களில் ஈடுபடுவதையும் சீனா தவிர்க்க வேண்டும் என்றார்.

2. இந்திய திரைப்பட இசைத் துறையில் புகழ்பெற்ற பாடகி ஆஷா போஸ்லே, மகாராஷ்டிர மாநிலம், மும்பையில் ஞாயிற்றுக்கிழமை (ஏப்.12) காலமானார். அவருக்கு வயது 92.

(i) பத்ம விபூஷண் விருது பெற்ற ஆஷா போஸ்லே ஹிந்தி, தமிழ் உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்டமொழிகளில் 12,000-க்கும் அதிக பாடல்களைப் பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

3. ஈரான், அமெரிக்கா இடையே பாகிஸ்தானில் நடைபெற்ற அமைதிப் பேச்சு தோல்வியில் முடிவடைந்தது. இதனால் மீண்டும் மேற்காசியாவில் போர் மூளும் அபாயம் உருவாகியுள்ளது.

(i) ஈரான் தரப்பில் 10 அம்ச திட்டம் முன்வைக்கப்பட்டநிலையில், அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபடக் கூடாது, ஹோர்முஸ் நீரிணையை முழுமையாகக் கட்டுப்படுத்துவது கூடாது என அமெரிக்கா சில நிபந்தனைகளை விதித்தது. அதில், இரு நாடுகளுக்கும் இடையே உடன்பாடு எட்டப்படவில்லை.

(ii) ஹோர்முஸ் நீரிணை வழியாகப் பயணிக்கும் வெளிநாட்டு கப்பல்களை அமெரிக்க கடற்படை தடுக்கும் என்று அந்நாட்டு அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

4. நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும், பாகிஸ்தானுக்கு சவூதி அரேபியா, கத்தார் நாடுகள் ரூ.46,550 கோடி நிதியுதவி அளித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இது குறித்து பாகிஸ்தானைச் சேர்ந்த 'டான்' நாளிதழில் வெளி யாகியுள்ள செய்தியில் தெரிவிக்

கப்பட்டிருப்பதாவது:

(i) பாகிஸ்தானுக்கு வழங்கிய ரூ.32,580 கோடி கடனை இந்த மாதத்துக்குள் திருப்பி அளிக்கும்படி, ஐக்கிய அரபு அமீரகம் வலியுறுத்தியுள்ளது. ஆதலால் அந்தத் தொகையை திருப்பி அளிக்க வேண்டிய கட்டாயத்தில் பாகிஸ்தான் உள்ளது. இதனால் பாகிஸ்தானிடம் உள்ள அந்நியச் செலாவணி கையிருப்புக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

(ii) இந்த நெருக்கடியில் இருந்து பாகிஸ்தானை மீட்கும் வகையில், அந்த நாட்டுக்கு நிதியுதவியாக ரூ.46,550 கோடியை சவூதி அரேபியாவும், கத்தாரும் வழங்கியுள்ளன.

(iii) பாகிஸ்தானுக்கு அதிக நிதியுதவி வழங்கும் நாடாக சவூதி அரேபியா திகழ்கிறது. இதுவரை பாகிஸதானுக்கு சவூதி அரேபியா மட்டும் ரூ.46,000 கோடிக்கும் மேல் நிதி அளித்துள்ளது என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iv) சவூதிக்கு சென்ற பாகிஸ்தான் ராணுவம்: இதனிடையே, சவூதி அரேபியாவுடன் செய்து கொண்ட பாதுகாப்பு ஒப்பந்தத்தின்படி, அந்நாட்டுக்கு பாகிஸ்தான் 13,000 ராணுவ வீரர்கள், 10 முதல் 18 போர் விமானங்களை அனுப்பி வைத்திருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது. சவூதி அரேபியாவின் பாதுகாப்புக்கு உதவும் நோக்கில் வீரர்களையும், போர் விமானங்களையும் பாகிஸ்தான் கடந்த மாதமே அனுப்பிவைத்து விட்டதாகவும், ஆனால் தற்போதுதான் அந்தத் தகவலை சவூதி அரேபியா வெளியிட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

(v) அதேபோல், ஏவுகணை இடை மறிப்பு சாதனங்களையும் சவூதி அரேபியாவுக்கு பாகிஸ்தான் கடந்த மாதம் அனுப்பி வைத்து விட்டதாகவும் இன்னொரு தகவல் தெரிவிக்கிறது.

(vi) அமெரிக்க, இஸ்ரேல் நாடுகளின் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், சவூதி அரேபியாவில் உள்ள அமெரிக்க ராணுவத் தளங்கள் மீது ஈரான் தொடர்ந்து ஏவுகணைகள், ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தி வந்தது. 2 வார காலம் சண்டை நிறுத்தத்தை அமெரிக்கா அறிவித்ததால், அந்தத் தாக்குதலை ஈரான் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது. மீண்டும் அமெரிக்கா தாக்கினால், ஈரானும் பதிலடி கொடுக்கக்கூடும் என எதிர்பார்க் கப்படுகிறது. இந்தச் சூழலில் சவூதி அரேபியாவுக்கு ராணுவ வீரர்களையும், போர் விமானங்களையும் பாகிஸ்தான் அனுப்பி வைத்திருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது.

5. அமெரிக்காவில் முதல்முறையாக இந்திய ஆன்மிகத் தலைவரான சுவாமி விவேகானந்தரின் முழு உருவச் சிலை சியாட்டில் நகரில் திறக்கப்பட்டுள்ளது.

(i) சியாட்டில் நகர மேயர் கேட்டி வில்சன் மற்றும் சியாட்டிலில் உள்ள இந்திய துணைத் தூதர் பிரகாஷ் குப்தா ஆகியோர் இணைந்து இந்தச் சிலையைத் திறந்து வைத்தனர். இந்த நிகழ்வில் இந்திய வம்சா வளியினர் மற்றும் உள்ளூர் தலைவர்கள் பலர் பங்கேற்றனர். நிகழ்வில் பேசிய மேயர் கேட்டி வில்சன், விவேகானந்தரின் சிலை, சியாட்டில் நகரின் பன்முகத் தன்மையை பிரதிபலிப்பதுடன், இரு நாடுகள் இடையே உள்ள உறவை மேலும் வலுப்படுத்தும் எனத் தெரிவித்தார்.

(ii) சியாட்டில் நகர மையத்தின் பரபரப்பான வெஸ்ட்லேக் சதுக்கத்தில் அமைந்துள்ள இந்த வெண்கலச் சிலை, இந்திய சிற்பி நரேஷ் குமார் குமாவத்தால் வடிவமைக்கப்பட்டது. இது நகரின் பன்முகத்தன்மையை அங்கீகரிக்கும் விதமாக இந்திய கலாசார உறவுகள் கவுன்சில் (ஐசிசிஆர்) சார்பில் பரிசாக வழங்கப்பட்டது.

(iii) அமேசான் தலைமையகமான 'ஸ்பியர்ஸ்', சியாட்டில் மாநாட்டு மையம் மற்றும் சியாட்டில் மையமோனோரயில் உள்ளிட்ட முக்கிய அடையாளச் சின்னங்களுக்கு அருகில் இந்தச் சிலை அமைந்துள்ளது. இந்த இடத்துக்கு தினமும் சுமார் 4 லட்சத்துக்கும் அதிகமானோர் வருகை தருகின்றனர்.

(iv) முன்னதாக, சுவாமி விவேகானந்தர் 1893-ஆம் ஆண்டு சிகாகோவில் நடைபெற்ற உலக மதங்களின் மாநாட்டில் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க சொற்பொழிவு உலகளாவிய கவனத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இதை மேற்கோள்காட்டி இந்திய தூதரகம் வெளியிட்ட சமூக ஊடகப் பதிவில், '1893 சிகாகோ விலிருந்து, 2026 சியாட்டில் வரை! நகர அடையாளத்தில் இந்தியாவின் புதிய நினைவுச் சின்னம்' எனக் குறிப்பிட்டுள்ளது.

6. நெதர்லாந்தில் நடைபெற்ற மாரத்தான் போட்டியில் இந்தியாவின் சாவன் பர்வால் 2 மணிநேரம், 11 நிமிஷங்கள், 58 விநாடிகளில் இலக்கை அடைந்து 20-ஆம் இடத்துடன் புதிய தேசிய சாதனை படைத்தார். 48 ஆண்டுகளுக்கு முன், 1978-இல் சிவநாத் சிங் (2:12) இலக்கை அடைந்ததே தேசிய சாதனையாக இருந்தது.

7.யுஎஸ் ஓபன் பிக்கிள் பால் சாம்பியன்ஷிப்பில், 18 வயதுக்கு உள்பட்ட ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் அர்ஜுன் சிங், ஆதித்யா சிங் இணை தங்கம் வென்று அசத்தியது.

8. பிரான்ஸில் நடைபெற்ற மான்டிகார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் இத்தாலியின் யானிக் சின்னர் சாம்பியன் கோப்பை வென்றார்.

(i) ஏற்கெனவே இண்டியன் வெல்ஸ் ஓபன், மியாமி ஓபன் ஆகிய போட்டிகளிலும் கோப்பை வென்ற சின்னர், இந்த வெற்றியின் மூலமாக நடப்பு சீசனில் 'ஹாட்ரிக்' மாஸ்டர்ஸ் பட்டங்களைக் கைப்பற்றியிருக்கிறார்.

(ii) உலகின் 2-ஆம் நிலையில் இருந்த சின்னர் இறுதிச்சுற்றில், நடப்பு சாம்பியனாக இருந்தவரும், உலகின் நம்பர் 1 வீரருமான ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸை வீழ்த்தினார். இந்த வெற்றியின் மூலமாக மான்டிகார்லோ மாஸ்டர்ஸ் சாம்பியன் ஆனதுடன், உலகின் நம்பர் 1 இடத்துக்கும் சின்னர் திரும்புகிறார்.

9. ஆசிய பாட்மின்டன் சாம்பியன்ஷிப் போட்டி ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்திய இளம் வீரர் ஆயுஷ் ஷெட்டி வெள்ளி வென்றார்.

(i) சீனாவின் நிங்போ நகரில் ஆசிய பாட்மின்டன் சாம்பியன் போட்டி நடைபெற்று வருகிறது. இதன் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி, உலகின் 2-ஆம் நிலை வீரர் சீனாவின் ஷி யு குயும் மோதினர்.

(ii) 61 ஆண்டுகள் கழித்து ஆசிய பாட்மின்டன் சாம்பியன் போட்டியில் ஒற்றையர் இறுதிக்கு முன்னேறியவர் என்ற சிறப்பு ஆயுஷ்ஷெட்டி பெற்றார்.

10. ஆந்திர மாநில தலைநகர் அமராவதி மேம்பாட்டுக்கு ரூ.3,165 கோடியை உலக வங்கி விடுவித்தது. அடுத்தகட்டமாக இம்மாத இறுதியில் ரூ.1,396 கோடியை விடுவிக்க இருக்கிறது. இது தொடர்பாக மாநில அரசு அதிகாரிகள் மேலும் கூறி யதாவது:

(i) உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி ஆகியவை ஆந்திர தலைநகர் மேம்பாட்டுத் திட்டத்துக்கு நிதி வழங்கி வருகின்றன. இதற்கு 8 முதல் 8.5 சதவீதம் வரை வட்டி உண்டு.

(ii) சர்வதேச சூழ்நிலைக்கு ஏற்பட வட்டி மாறக் கூடியதாக இருக்கும். இரு வங்கிகளும் சேர்ந்து மொத்தம் ரூ.14,894 கோடி கடன் தர ஒப்புக்கொண்டுள்ளன. இது தவிர மத்திய அரசு

ரூ.15,000 கோடி நிதி ஒதுக்கிறது. இதில் ரூ.1,400 கோடி முதல் கட்டமாக விடுவிக்கப்பட இருக்கிறது.

(iv) சர்வதேச வங்கிகளின் கடனை 29 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும். தேவை ஏற்பட்டால் கூடுதலாக 6 ஆண்டுகள் அவகாசம் வழங்கப்படும். உலக வங்கிக் கடனை 2031 ஜூன் மாதத்தில் இருந்து திருப்பிச் செலுத்தத் தொடங்க வேண்டும்.

(v) வெள்ளம் உள்ளிட்ட இயற்கைப் பேரிடர்களால் பெரிய அளவில் பாதிப்புகளை ஏற்படாதவாறு அமராவதி நகரம் கட்டமைக்கப்படுகிறது.

(vi) சர்வதேச அளவில் முன்னணி தொழில்நுட்பங்களுடன் அமராவதி உருவாகும். வளர்ச்சி, வேலைவாய்ப்பு, மக்களுக்கு சிறப்பான வாழ்க்கைத்தரம் ஆகியவை அமராவதியில் இருக்கும் என்றனர்.

11. நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் நீட்சியாக, வரும் ஏப்.16 முதல் மூன்று நாள்களுக்கு நடைபெறவுள்ள சிறப்பு அமர்வில் தவறாமல் பங்கேற்கும்படி பாஜக எம்.பி.க்கள் அனைவருக்கும் அக்கட்சி கொறடா உத்தரவு பிறப்பித்துள்ளது.

(i) நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளில் மகளிருக்கான 33 சதவீத இடஒதுக்கீட்டை 2029-ஆம் ஆண்டுமுதல் அமல்படுத்தவும், அதற்கிணங்க மொத்த மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 543-இல் இருந்து 816-ஆக அதிகரிக்கவும் வகை செய்யும் சட்டத்திருத்த மசோதாக்களைக் கொண்டுவந்து நிறைவேற்றும் நோக்கில் சிறப்பு அமர்வு நடைபெறவுள்ளது.

(ii) இது தொடர்பான வரைவு மசோதாக்களுக்கு மத்திய அமைச்சரவை ஏற்கெனவே ஒப்புதல் வழங்கிவிட்டதாகத் தெரிகிறது.

(iii) இந்தச் சூழலில், ஏப்.16 முதல் நடைபெறவிருக்கும் நாடாளுமன்ற சிறப்பு அமர்வில் தங்களது கட்சியைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் மற்றும் எம்.பி.க்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று பாஜக தரப்பில் கொறடா உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

12. அண்மைய தேர்தல் பங்கேற்பு மற்றும் வாக்காளர் பட்டியலின் துல்லியம் ஆகியவற்றின் மீதான 'சிறப்புத் தீவிரத் திருத்தத்தின்' (SIR) தாக்கம்.

(i) காரணங்கள்

- வாக்காளர் பட்டியல் பெருக்கம்: முந்தைய பட்டியல்களில், உயிரிழந்தவர்கள், நிரந்தரமாகக் குடியேறியவர்கள் மற்றும் இரட்டைப் பதிவுகள் எனப் பெருமளவிலான பெயர்கள் இடம்பெற்றிருந்தன.
- துல்லியத்தை உறுதி செய்தல்: ஜனநாயகத்தின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையில், தகுதிவாய்ந்த மற்றும் சரிபார்க்கப்பட்ட வாக்காளர்கள் மட்டுமே பட்டியலில் நீடிப்பதை உறுதி செய்வதே இதன் முதன்மை நோக்கமாக இருந்தது.
- அரசியல் குற்றச்சாட்டுகள்: இந்தத் திருத்தப் பணி வாக்களிக்கும் உரிமையைப் பறிப்பதற்கான ஒரு சதி என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின; முரண்பாடாக, இந்தக் குற்றச்சாட்டே வாக்காளர்களைத் தேர்தலில் பங்கேற்கத் தூண்டியது.

(ii) நிகழ்வுகள் (காலவரிசைப்படி அமைந்த உண்மைகள்)

- 2025-இன் பிற்பகுதி (பீகார்): பீகார் சட்டமன்றத் தேர்தல்களுக்கு முன்னதாக, தேர்தல்

ஆணையம் SIR செயல்முறையைத் தொடங்கியது. இதன் வரைவுப் பட்டியலில், தொடக்கத்தில் 65 லட்சம் பெயர்கள் நீக்கப்பட்டன; அதைத் தொடர்ந்து மேலும் 3.66 லட்சம் பெயர்கள் நீக்கப்பட்டன.

- செப்டம்பர் 2025 (பீகார் இறுதிப் பட்டியல்): புதிதாகத் தகுதிபெற்ற 21 லட்சம் வாக்காளர்களைச் சேர்த்த பிறகு, இறுதிப் பட்டியல் 7.42 கோடியாக நிர்ணயிக்கப்பட்டது; முந்தைய பட்டியல்களுடன் ஒப்பிடுகையில், மொத்தம் 47 லட்சம் பெயர்கள் நிகர அடிப்படையில் நீக்கப்பட்டிருந்தன.
- ஏப்ரல் 2026 (தமிழ்நாடு இறுதிப் பட்டியல்): SIR செயல்முறையைத் தொடர்ந்து, தமிழ்நாட்டின் வாக்காளர் எண்ணிக்கை 6.41 கோடியிலிருந்து 5.73 கோடியாகக் குறைந்தது; இதன் விளைவாக, சுமார் 68 லட்சம் பெயர்கள் நீக்கப்பட்டன.
- பிராந்திய அளவிலான குறைப்புகள்: இதே காலகட்டத்தில், புதுச்சேரியில் வாக்காளர் பட்டியல் 7.5 சதவீதமும், கேரளாவில் 3.2 சதவீதமும், அசாமில் 1 சதவீதமும் குறைக்கப்பட்டன.
- சாதனை அளவிலான வாக்குப்பதிவு (அண்மைய வாரங்கள்): வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்குப் பிறகு நடைபெற்ற அண்மையத் தேர்தல்களில், சாதனை அளவிலான பங்கேற்பு பதிவானது: அசாமில் 85.91%, புதுச்சேரியில் 89.97%, மற்றும் கேரளாவில் 78.27%.

(iii) விளைவுகள்

- புள்ளிவிவர ரீதியான வாக்குப்பதிவு உயர்வு: 'மாய வாக்காளர்களை' (இறந்தவர்கள் அல்லது இடம்பெயர்ந்தவர்கள்) பட்டியலில் இருந்து நீக்கியதன் மூலம், வாக்களித்தவர்களின் சதவீத அளவு தானாகவே உயர்ந்தது. உதாரணமாக, பீகாரில் தேர்தல் பங்கேற்பு 9 சதவீதம் அதிகரித்து (66.91%), 1951-ஆம் ஆண்டிற்குப் பிறகு பதிவான மிக உயர்ந்த அளவாக அமைந்தது.
- "பய உணர்வு": வாக்களிக்கும் உரிமையை இழக்க நேரிடும் என்று அரசியல் தரப்பினரால் உருவாக்கப்பட்ட பய உணர்வே, முன்பு தேர்தலில் பங்கேற்காமல் இருந்த வாக்காளர்களைத் தங்கள் உரிமையை "காப்பாற்றிக்கொள்ளும்" நோக்கில் வாக்குச்சாவடிகளை நோக்கித் தள்ளியது.
- மேம்படுத்தப்பட்ட நம்பகத்தன்மை: இந்தச் சாதனைகள் ஒரு இந்திய மைல்கல் மட்டுமல்ல, ஜனநாயக நலனுக்கான ஒரு உலகளாவிய சாதனையாகும் என்று தலைமைத் தேர்தல் ஆணையர் குறிப்பிட்டார்.

(iv) தீர்வுகள்

- தொடர்ச்சியான சரிபார்ப்பு: தூய்மையான வாக்காளர் பட்டியலைப் பராமரிக்க இத்தகைய தீவிரத் திருத்தங்கள் அவசியமானவை.
- பொது விழிப்புணர்வு: இந்த அதிக வாக்குப்பதிவு அளவுகளைத் தக்கவைக்க, இளைய தலைமுறையினரிடையே அவர்களின் வாக்கின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பது மிகவும் முக்கியமானது.

(v) அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

- வெளிமாநிலத்தவர்கள் மற்றும் இறந்த வாக்காளர்களைக் கண்டறிய, தேர்தல் ஆணையம் கள அளவிலான தீவிர சரிபார்ப்பு மூலம் சிறப்புத் தீவிரத் திருத்தங்களை (SIR) நடத்தியது.
- பெயர் நீக்கத்திற்காகக் குறிக்கப்பட்ட குடிமக்களுக்கு, செல்லுபடியாகும் ஆவணங்களைச் சமர்ப்பித்து, அவர்கள் இறுதிப் பட்டியலில் நீடிப்பதை உறுதிசெய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது.

- எதிர்காலத் தேர்தல்களில் இரட்டைப் பதிவுகள் மீண்டும் தோன்றுவதைத் தடுக்க, டிஜிட்டல் மற்றும் சரிபார்க்கப்பட்ட அடையாளங்களைப் பயன்படுத்துவதை ஆணையம் வலியுறுத்தியது.

13. 2026 மேற்கு ஆசிய நெருக்கடியின் உத்திசார் பகுப்பாய்வும், உலக வர்த்தகக் கட்டமைப்பின் மீதான அதன் தாக்கமும்.

(i) நெருக்கடிக்கான காரணங்கள்

- புவிசார் அரசியல் மோதல்: அமெரிக்கா-இஸ்ரேல் கூட்டணிக்கும் ஈரானுக்கும் இடையிலான இராணுவ மோதலே இதற்கு முதன்மையான காரணமாகும்; இது பிப்ரவரி 28, 2026 அன்று ஈரானின் மீது நடத்தப்பட்ட கடுமையான தாக்குதல்களுடன் தொடங்கியது.
- அணு ஆயுத லட்சியங்கள்: ஈரான் இரகசியமாக அணு ஆயுதங்களையும் நீண்ட தூர ஏவுகணைகளையும் உருவாக்கி வருவதாகக் குற்றம் சாட்டி, அமெரிக்காவும் இஸ்ரேலும் தங்கள் தாக்குதல்களை நியாயப்படுத்துகின்றன.
- உத்திசார் பாதிப்புநிலை: சுமார் 35 டிரில்லியன் டாலர் (₹3,250 லட்சம் கோடி) மதிப்புள்ள நவீன உலக வர்த்தகம், எளிதில் முற்றுகையிடக்கூடிய, குறுகிய மற்றும் மாற்றியமைக்க இயலாத கடல்வழிப் பாதைகளையே அதிகளவில் சார்ந்திருக்கிறது.
- ஈரானின் பதிலடி: இத்தாக்குதல்களுக்குப் பதிலடியாக, ஈரான் தனது புவியியல் அனுகூலத்தைப் பயன்படுத்தி ஹார்முஸ் நீரிணையை மூடியது; இதன் மூலம் அது உலகப் பொருளாதாரத்தையே திறம்படப் பணயக்கைதியாகப் பிடித்துக்கொண்டது.

(ii) குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் (காலவரிசை உண்மைகள்)

- பிப்ரவரி 28, 2026: மோதல்கள் வெடித்தன; அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரானின் உள்கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்தின.
- முற்றுகை: ஈரான் ஹார்முஸ் நீரிணையை முற்றுகையிட்டது; இது 167 கி.மீ. நீளமும், மிகக் குறுகிய இடத்தில் வெறும் 33 கி.மீ. அகலமும் கொண்ட ஒரு கடல்வழிப் பாதையாகும்.
- வர்த்தக அளவு: இப்பாதை வழியாக நாள்தோறும் 2 கோடி பீப்பாய்கள் கச்சா எண்ணெய் கடந்து செல்கின்றன; இது உலகளாவிய கடல்வழி எண்ணெய் வர்த்தகத்தில் 20 சதவீதத்தையும், உலகின் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (LNG) வர்த்தகத்தில் 19 சதவீதத்தையும் குறிக்கிறது.
- ஏப்ரல் 8, 2026: கடுமையான உலகளாவிய அழுத்தத்திற்கும், அமெரிக்காவின் இறுதி எச்சரிக்கைக்கும் (ultimatum) பணிந்து, முழு அளவிலான போர் தொடங்குவதற்கான காலக்கெடு முடிவடைவதற்குச் சரியாக 90 நிமிடங்களுக்கு முன்பு, அதிபர் டிரம்ப் இரண்டு வார கால போர்நிறுத்தத்தை அறிவித்தார்.
- ஏப்ரல் 12, 2026 (இஸ்லாமாபாத் பேச்சுவார்த்தைகள்): பாகிஸ்தானின் மத்தியஸ்தத்துடன் அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையே நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தைகள், எவ்வித உடன்பாட்டையும் எட்டாமல் தோல்வியடைந்தன. ஈரானின் அணு ஆயுதத் திட்டம் மற்றும் ஹார்முஸ் நீரிணையின் நிரந்தரக் கட்டுப்பாடு ஆகியவை தொடர்பான கருத்து வேறுபாடுகள் நீடித்தன.
- அமெரிக்கக் கடற்படை உத்தரவு: பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, ஹார்முஸ் நீரிணையில் ஈரான் அமைத்துள்ள அனைத்து நீருக்கடியில் உள்ள கண்ணிவெடிகளையும் அகற்றுமாறும், சர்வதேசக் கப்பல்களிடமிருந்து சட்டவிரோதச் சுங்கக் கட்டணங்களை வசூலிக்க ஈரான் மேற்கொள்ளும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்துமாறும் அதிபர் டிரம்ப் அமெரிக்கக் கடற்படைக்கு

உத்தரவிட்டார்.

(iii) உலகளாவிய விளைவுகள்

- எரிசக்திப் பணவீக்கம்: மோதல் தொடங்கியதிலிருந்து கச்சா எண்ணெய் விலைகள் 51 சதவீதம் உயர்ந்து, ஒரு பீப்பாய்க்கு 94 டாலர் என்ற அளவை எட்டின.
- விநியோகச் சங்கிலி சரிவு: உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் எரிசக்தி விநியோகம் தடைபட்டுள்ளது; எரிசக்தி பற்றாக்குறையால் குளிர்பதனக் கிடங்குகள் செயலிழந்து வருவதால், துபாய் போன்ற ஏற்றுமதி மையங்களில் மருந்துகள் 'அழுகிப் போவதாக' கூறப்படுகிறது.
- தென் கொரியாவின் நெருக்கடி: தனது 97% எரிசக்தி இறக்குமதிக்கு ஜலசந்தியையே சார்ந்துள்ள அந்நாடு, தனது உயர் தொழில்நுட்பத் துறையில் சரிவை எதிர்கொள்கிறது. உலகின் 67% ரேம் மற்றும் 80% உயர்தர கணினி சேமிப்பகத்தை உற்பத்தி செய்யும் சாம்சங் மற்றும் எஸ்.கே. ஹைனிக்ஸ் நிறுவனங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன, இது உலகளாவிய செயற்கை நுண்ணறிவு (AI) துறைக்கு அச்சுறுத்தலாக உள்ளது.
- கத்தாரின் இழப்பு: கத்தாரின் திரவ இயற்கை எரிவாயு (LNG) ஆலைகள் மீதான ஈரானின் தாக்குதல்களால், ஆண்டுக்கு சுமார் 20 பில்லியன் டாலர் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதுடன், குறைக்கடத்திகளுக்கு அத்தியாவசியமான ஹீலியம் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. இதனால் ஹீலியத்தின் விலை இருமடங்காக உயர்ந்துள்ளது.
- தளவாடத் தாமதம்: ஆப்பிரிக்காவைச் சுற்றி மாற்றுப் பாதையில் செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ள கப்பல்கள், கூடுதலாக 10 முதல் 14 நாட்கள் பயண நேரத்தையும், சரக்குக் கட்டணங்களில் மிகப்பெரிய அதிகரிப்பையும் எதிர்கொள்கின்றன.

(iv) முன்மொழியப்பட்ட தீர்வுகள்

- அமைப்பு ரீதியான அங்கீகாரம்: உலகம் இதை ஒரு உள்ளூர் மோதலாகப் பார்ப்பதை நிறுத்தி, 800 கோடி மக்களைப் பாதிக்கும் ஒரு பணயக்கைதிகள் சூழ்நிலையாக அங்கீகரிக்க வேண்டும்.
- நிலையான கடல்வழிப் பாதைகள்: எந்தவொரு தனி நாடும் முக்கிய கடல்வழிப் பாதைகளை ஒருதலைப்பட்சமாக முற்றுகையிட முடியாது என்பதை உறுதிப்படுத்த சர்வதேச ஒத்துழைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
- இராஜதந்திர மாற்று: உலகப் பொருளாதாரங்கள் முற்றிலும் ஒன்றையொன்று சார்ந்திருப்பதால், முழுமையான பொருளாதார அழிவைத் தவிர்ப்பதற்கு ஒரு நிரந்தர இராஜதந்திரத் தீர்வு மட்டுமே ஒரே "கண்ணியமான மாற்று" ஆகும்.

(v) அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

- அத்தியாவசிய சேவைகள் (இந்தியா): உள்நாட்டுப் பீதியைத் தடுப்பதற்காக, உலகளாவிய நிலையற்ற தன்மைக்கு மத்தியிலும் எரிபொருள் மற்றும் எரிவாயுவின் சீரான விநியோகத்தை உறுதி செய்ய, இந்திய அரசாங்கம் அத்தியாவசிய சேவைகள் பராமரிப்புச் சட்டத்தை (ESMA) செயல்படுத்தியது.
- இந்திய இராஜதந்திரம்: ஒரு "நட்பு நாடு" என்ற வகையில், எண்ணெய் மற்றும் எரிவாயுவை ஏற்றிச் செல்லும் இந்தியக் கப்பல்கள் ஜலசந்தி வழியாகச் செல்ல அனுமதிக்கும் ஒரு தற்காலிக ஒப்பந்தத்தை இந்தியா ஆரம்பத்தில் ஈரானிடமிருந்து பெற்றது.
- அமெரிக்க கடற்படைத் தலையீடு: ஈரான் "சுங்கக் கட்டணம் வசூலிப்பதை" ஒரு மிரட்டல் ஆயுதமாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காக, கண்ணிவெடிகளை

அகற்றும் நடவடிக்கைகளுக்கும் சர்வதேச கப்பல் போக்குவரத்திற்கு நேரடி இராணுவப் பாதுகாப்பு அளிப்பதற்கும் அமெரிக்க அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக அங்கீகாரம் அளித்துள்ளது.

- வெளியேற்றும் முயற்சிகள்: தற்போதைய போர்நிறுத்தத்தின் போது, மோதல்கள் மீண்டும் ஏற்பட வாய்ப்புள்ளதால், ஈரானில் எஞ்சியுள்ள 9,000 இந்தியக் குடிமக்களை உடனடியாக வெளியேறுமாறு இந்திய அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.